# கம்புறுப்பிட்டிய பிரதேச சபை

# மாத்தறை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 13 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கம்புறுப்பிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

---------------------------------------------

மீளாய்வாண்டிக்காக சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கருதுகோள்கள் பற்றிய குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் மீளாய்வாண்டிற்கான சபை அமர்வுப் படி மீளளிப்புச் செய்யும் போது சபையின் அங்கத்தவர்கள் 09 பேருக்கு வழங்கியிருந்தது. மோட்டார் சைக்கிள்களுக்காக ரூபா 405,000 தொகையொன்று கழிக்கப்பட்டிருந்தது. அத் தொகையினை வருமானச் செலவுக் கணக்கில் வருமான உதவியின் கீழும், சம்பளங்கள் மற்றும் படிகளின் கீழும் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 41,650 இற்கான மூலதனச் செலவுகளை 109 மற்றும் 309 செலவுத் தலைப்புக்கள் 2 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அச் செலவு இரட்டைப்படுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக வருமானச் செலவுக் கணக்கின் மூலதனச் செலவுகள் அத் தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆண்டிற்கான நாட்குறிப்பு 33 இன் பிரகாரம் கணக்குகளில் ஏற்பட்டிருந்த பிழைகளை சரிசெய்வதற்காக, 2014 ஆண்டின் போது திரண்ட நிதிக் கணக்கிற்கு ரூபா 157,710 தொகை ஒன்று வரவு வைக்கப்பட்டு பலவின கடன்பட்டோருக்கு அத் தொகையினை செலவு வைக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறாயினும் நாட்குறிப்பு 18 இன் மூலம் திரண்ட நிதியக் கணக்கிற்கு ரூபா 315,420 இற்கான தொகையினை வரவு வைக்கப்பட்டு பலவின கடன்பட்டோர் கணக்கிற்கு அத் தொகையை செலவு வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அக் கணக்குகளுக்கு ரூபா 157,110 தொகையொன்று வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது ஏனைய துணைச் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்த மூலதன சொத்துக்கள் திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவு ஆகிய ரூபா 589,692 தொகையில் முற்பணமாக செலுத்தியிருந்த ரூபா 200,000 தொகையும், கணக்களிடையே மாற்றுதல் ரூபா 200,000 தொகையுமாக மொத்தமாக ரூபா 400,000 தொகையும் அடங்கியிருந்தது.

(உ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்பு பதிவேடுகளின் பிரகாரம் நீர் உபகரணங்களின் இருப்பு 59 நீர் மானிகள் காணப்பட்டதுடன், அவற்றின் பெறுமதி ரூபா 277,300 ஆகும். அவ்வாறாயினும் நீர்மானி இருப்பின் பெறுமதி ஐந்தொகையில் ரூபா 94,400 என ரூபா 182,900 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கில் நீர் வழங்கள் செயற்திட்டத்தின் கீழ் மூலதனச் சொத்துக்கள், திருத்தங்கள் மற்றும் பராமரிப்புக்கள் செலவுகள் என காட்டப்பட்டிருந்த ரூபா 510,025 இற்கான தொகையினை கணிக்கும் போது இறுதி இருப்பு குறைவாக பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 182,900 இற்கான தொகையினால் அச் செலவுகளில் மிகை ஒன்று ஏற்பட்டிருந்தது. மேலும் ஆண்டின் போது 91 நீர்மானிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 422,700 ஆக காணப்பட்டது. இந்த செலவுகள் மூலதனச் செலவுகள் எனினும் திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகளின் கீழ் மீண்டுவரும் செலவு ஒன்றென காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது காணிகள் மற்றும் கட்டிடங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,064,697 இற்கான மூலதனச் செலவுகள் வருமானச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மூலதனச் செலவுகளின் மூலம் சபைக்கு உரித்தாக்கிய சொத்துக்கள் ஒவ்வொரு சொத்துக்களின் கீழும் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(எ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிகளின் பெறுமதி ரூபா 19,432,655 தொகையில் அந்த சொத்துக்களை பராமரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 117,970 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஏ) 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டுவண்டிகளின் பெறுமதி ஆகிய ரூபா 2,924,725 தொகையில் இலக்கம் 049-0267 குபோட்டோ டிரக்டரின் (டேலர் உடன்) பெறுமதி ரூபா 225,000 வும் அடங்கியுள்ளது. இந்த டிரக்டர் வண்டி 2014 அக்டோபர் 31 திகதி ஏல விற்பனையில் விற்பனை செய்திருந்ததுடன் இச் சொத்துக்களை புத்தகங்களில் இருந்து அகற்றுதல் தொடர்பான நாட்குறிப்பு இலக்கம் 29 இன் பிரகாரம் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தில் பங்களிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மோட்டார் வாகனக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக பொறித் தொகுதிகள் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறித் தொகுதியின் பெறுமதி ரூபா 225,000 இனால் குறைவாகவும் மோட்டார் வாகனங்கள் மாட்டு வண்டிக் கணக்கு அதே தொகையால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) நாட்குறிப்பு 16 மூலம் ரூபா 1,420,062 தொகையொன்று பொறித் தொகுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு

செலவு வைக்கப்பட்டிருந்த போதும் அத் தொகையில் ரூபா 159,947 இற்கான வருமானச் செலவும் அடங்கியிருந்தது.

(ஒ) கம்புறுப்பிடிய மாப்பலான ரட்டலங்காவத்த காணியில் நிர்மாணிக்கப்படும் தகன சாலைக்காக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட நூற்றிற்கு 20 ஆகிய முற்பணம் ரூபா 3,288,747 தொகையினை முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் 309 செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அத் தொகையால் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவு மிகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ஓ) தகனச் சாலையில் எரிவாயு பெற்றுக் கொள்ளும் பதிவேட்டின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எரிவாயு கையிருப்பு 240 கிலோக்கள் காணப்பட்டது. அவற்றின் பெறுமதி ரூபா 46,495 ஆகும். இந்த இருப்பு மீளாய்வாண்டிற்கான ஐந்தொகையில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 9,700 இற்கான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் நாட்குறிப்பு 31 இன் மூலம் அப் பணத்தை அனுமதிப்பத்திரக் கட்டணக் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதனை வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணக் கணக்கொன்றிற்கு வரவு வைக்கப்பட வேண்டியிருந்தது.

(க) உள்ளூராட்சி திணைக்களத்தினால் புரநெகும செயற்திட்டத்திற்காக 2014 ஜூன் 30 திகதி சபைக்கு வழங்கியிருந்த கணனி மற்றும் உபகரணங்களின் பெறுமதியை கணித்து நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான ஆறு கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 122,809,032 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகள்/ பட்டோலைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 103,244,164 ஆக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 19,564,868 ஆகும்.

1.3.4 தொங்கல் கணக்குகள்

----------------------------------------

முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 1,168,845 இற்கான தொங்கல் கணக்கின் மீதியை மீளாய்வாண்டின் போதும் தீர்த்திருக்கவில்லை.

1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 18,683,671 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,412,540 ஆகும்.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 65,618,085 பெறுமதியான 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கை, முற்பணப் பதிவேடு, பட்டோலைகள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.7 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 38 முன்பள்ளிகளுக்காக 2013 மற்றும் 2014 பரிசு வழங்குவதற்காக பயிற்சிப் புத்தகங்கள் பிரவுன் பேபர் பேக் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 199,700 இற்கான தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) இன் பிரகாரம்ஏதேனும் கல்வி மற்றும் நலன்புரி நிறுவனம் ஒன்றிற்கு உதவி நிதியாகவோ அல்லது ஒரு வருடத்திற்கு மொத்தக் கூட்டுத்தொகை ஆயிரம் ரூபாவை மிகைக்காத பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்படும் உதவி நிதியொன்று மற்றும் அமைச்சரினால் ஆவண ரீதியாக பூர்வாங்க அங்கீகாரத்துடன் பிரதேச சபையினால் அவ் விடயங்களுக்காக அங்கீகரிக்கப்படும் வேறு ஏதும் உதவி நிதி ஒன்று வழங்க முடியும் எனினும் சபை நிதியத்தில் இருந்து ரூபா 199,700 இற்கான தொகை ஒன்று முன் பள்ளிகளுக்கு புத்தகங்கள் வழங்குவதற்காக 2013/2014 ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்ததுடன் அச் செலவுகளுக்காக மேற் குறிப்பிட்டுள்ளவாறு அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது வருமானத்தை விஞசிய மீண்டுவரும் செலவு ரூபா 3,221,528 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,416,946 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

---

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 338 | 359 | 977 |
| வாடகை | 5,529 | 5,831 | 998 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,803 | 1,438 | 80 |
| ஏனைய வருமானங்கள் மற்றும் உதவி | 33,400 | 32,469 | 69,289 |

2.2.2 வீத வரி

--------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 747,063 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான பில் போடப்பட்டவைகள் ரூபா 313,179 தொகையாகும். 2014 ஆண்டிற்கான பில் போடப்பட்டவைகளில் ரூபா 121,445 இற்கான தொகையொன்றும் நிலுவைத் தொகையில் ரூபா 140,445 இற்கான தொகை ஒன்றும் ஆண்டின் போது அறவீடு செய்திருந்தது. நிலுவைத் தொகையில் ஆண்டின் போது அறவீடுகளின் சதவீதம் 16 ஆகிய சிறிய பெறுமதியே காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில்போடப்பட்டவை அறவீடுகளின் சதவீதம் சுமார் நூற்றிற்கு 39 ஆகும். 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி ரூபா 259,955 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான பில்போடப்பட்டவைகள் ரூபா 22,250 ஆகும். ஆண்டின் போது நிலுவைத் தொகையில் பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன், வருடாந்த பில்போடப்பட்டவைகளில் ஆண்டின் போது அறவீடுகளின் முன்னேற்றம் சுமார் நூற்றிற்கு 13 ஆகும்.

2.2.3 நீர் வரி

-----------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 1,194,584 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான பில்போடப்பட்டவை ரூபா 1,422,369 தொகையும் ஆண்டிற்கான மிகைக் கட்டணம் ரூபா 392,130 தொகையுமாகும். ஆண்டின் போது நிலுவைத் தொகையில் ரூபா 444,070 அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவை அறவீடுகளின் முன்னேற்றம் சுமார் நூற்றிற்கு 37 ஆகும். ஆண்டிற்கான பில்போடப்பட்டவைகளில் அறவீடுகள் ரூபா 864,185 ஆகக் காணப்பட்டதுடன் அறவீடுகளின் முன்னேற்றம் சுமார் நூற்றிற்கு 61 ஆகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

--------------------------------------------------

3.1.1 பதவியணிக் கடன்

----------------------------------

பதவியணிக் கடன் பதிவேட்டின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 2,336,514 ஆகும். அம் மீதியில் 2004 ஆண்டிற்கு முன்னர் முதல் தவணைப் பணம் அறவிடப்படாத 16 ஊழியர்களின் கடன் மீதி ரூபா 63,276 ஆகும்.

3.1.2 மனித வள முகாமைத்துவம்

----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| மூன்றாம் தரம் | 01 | 01 | - | - |
| இரண்டாம் தரம் | 26 | 23 | 03 | - |
| ஆரம்ப தரம் | 37 | 36 | 01 | - |
| ஏனைய | - | 26 | - | 26 |
| மொத்தம் | 64 | 86 | 04 | 26 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பதவியணி சம்பளங்கள் மற்றும் படிகளுக்காக ரூபா 17,442,000 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான பதவியணிச் சம்பளம் மற்றும் படியாக ரூபா 24,877,930 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 7,435,930 தொகை ஒன்று சபை நிதியத்திற்கு செலவு பொறுப்பாகியிருந்தது. அவை சம்பள செலவுகளில் சுமார் நூற்றிற்கு 30 ஆகும்.

(ஆ) திறைசேரிச் செயலாளரின் 2002 ஜனவரி 03 திகதிய இலக்கம் 14 கொண்ட முகாமைத்துவச் சேவை சுற்று நிருப இலக்கம் 14 இன் பிரகாரம் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 2006 ஏப்ரல் 10 திகதிய முகாமைத்துவச் சேவை சுற்று நிருப இலக்கம் 28 இன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் தற்காலிக, அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது வேறேதேனும் அடிப்படையாக மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என அறிவித்திருந்த போதும் சபை 2014 ஆண்டின் போது 26 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு சபை நிதியத்தில் இருந்து சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு தொடர்பாக சுயமாக உருவாக்கிய வருமானம் ரூபா 21,762,445 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ஆண்டின் போது பணமாக கிடைத்தவை ரூபா 14,957,267 ஆகும். மீளாய்வாண்டிற்கான பதவியணிச் சம்பளம் செலுத்துவதற்காக சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,435,930 இற்கான தொகை மீளாய்வாண்டின் போது பணமாக பெற்றிருந்த சுயமாக உருவாக்கிய வருமானம் சுமார் நூற்றிற்கு 52 ஆகும்.

3.1.3 பௌதீகச் சொத்துக்கள் முகாமைத்துவம்

---

தலைவர் / உப தலைவர் / வேலை அத்தியட்சகர் / தொழில் நுட்ப அலுவலர் மற்றும் சபைச் செயலாளரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு ஏதேனும் அலுவலர் ஆகியோர் அடங்கிய விசாரணை சபையினால் சபை பயன்படுத்தும் மற்றும் வதிவதற்கு பயன்படுத்தப்படும் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 218 இன் பிரகாரம் எல்லா வருடங்களிலும் ஒரு முறை பரிசோதனை மேற்கொள்வதற்கு தலைவரினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.1.4 பாதைகள் முகாமைத்துவம்

---

சபையினால் மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான அதிகாரப் பிரதேசம் சதுர கி.மீ. 60.86 ஆக காணப்பட்டதுடன் 39 கிராம சேவகர்கள் பிரிவுகள் அடங்குகின்றது. பாதையின் மொத்த நீளம் 334.76 கி.மீ. ஆகும். அத்துடன் தார், மண் அல்லது கொங்கிரீட் பாதைகள் நீளம் முறையே 27 கி.மீ. உம், 245.76 கி.மீ. உம், 62 கி.மீ. உம் ஆகும்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24 இன் பிரகாரம் வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டிருந்த 42 பாதைகளை சபையின் பாதைகள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) பாதைகள் பதிவேடு பேணப்பட்டிருந்த போதிலும் அதில் 405 பாதைகள் மாத்திரமே உட்படுத்தப்பட்டிருந்தது. 314 பாதைகள் தொடர்பாக பாதைகளின் தன்மை (தார், சரளைக் கற்கள், கொங்கிரீட்) பாதைப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பாதை இலக்கம் 315 முதல் 405 வரை பாதைகளுக்கான நீளம், அகலம் மற்றும் தன்மை ஆகியனவே ஏதும் பாதைகள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

-------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது சபையின் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) செலவுக் கட்டுப்பாடு

(உ) களஞ்சிய கட்டுப்பாடு

(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்